

பாமாலை 63A - சபையே இன்று வானத்தை

1. சபையே இன்று வானத்தை
திறந்து தமது
சுதனைத் தந்த கர்த்தரை
துதித்துக் கொண்டிரு.

2. பிதாவுக்கொத்த இவரே
குழந்தை ஆயினார்
திக்கற்று முன்னணையிலே
ஏழையாய்க் கிடந்தார்.

3. தெய்வீக ஸ்பாவம் நம்மிலே
உண்டாக ஆண்டவர்
நரரின் ஸ்பாவமாய் இங்கே
வந்து பிறந்தனர்.

4. சிறியோராக ஆண்டவர்
பலத்தை மாற்றினார்;
பண்செய்வன் ரூபை சிஷ்டிகர்
தாமே எடுக்கிறார்.

5. அவர் புவியில் பரம
இராஜ்ஜியத்தையே
உண்டாக்க வந்தோராகிய
தாவீதின் மைந்தனே.

6. தாழ்ந்தார் அவர் உயர்ந்தோம்
நாம்
இதென்ன அற்புதம்?
இதுன்னத சிநேகம் ஆம்
அன்பதின் பூரணம்.

7. திரும்பப் பரதீசுக்கு
வழி திறந்துபோம்
கேரூபின் காவல் நீங்கிற்று
மகிழ்ந்து பாடுவோம்.